**ருவன்வெல்ல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருவன்வெல்ல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்ககளின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 1,020,783 ஆன மானியம் மற்றும் ரூபா 1,164,131 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம், மூலதன வருமானம் மற்றும் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நிலுவை ஏனைய வருமானங்களிலிருந்து குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக் காட்டிய விடயங்கள் சரியென அறிவிக்கப்பட்டிருந்தன. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலுவை வீதவரி குத்தகை கணக்கு மீதியை சரிசெய்வதற்காக ஒத்த குறிப்பொன்றின் மூலம் எவ்வித அங்கீகாரமுமின்றி கிடைக்க வேண்டிய வீதவரி ரூபா 2,072,771 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு சமர்பித்துள்ளதாக அறிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரமின்றி கிடைக்க வேண்டிய வீதவரி குத்தகையை பதிவழிக்க முடியாததுடன் கணக்கீடு செய்தலை சரியாக செய்ய வேண்டும். |
| (இ) | வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி ரூபா 338,437 குறைத்து காட்டியதன் காரணமாக வாசிகசாலை புத்தகக் கணக்கு மற்றும் மூலதனத்திலிருந்து வருமானத்திற்கு பங்களிக்கும் கணக்கு அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக் காட்டியுள்ள விடயத்தை ஏற்றுக் கொள்வதாகவும் 2022 ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மாகாணக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது மாதாந்த அங்கீகார எரிபொருள் 500 லீட்டரை விஞ்சி 2012 ஏப்ரல் முதல் 2020 செப்டெம்பர் வரை 17,265.85 லீட்டர் எரிபொருள் பிரதேச சபையின் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதிப் பிரமாணம் 156(i)அ(i) பிரகாரம் உரிய அதிகாரமின்றி மற்றும் 156 (7) இற்கு மாற்றமாக எரிபொருளிற்காக ரூபா 1,898,611 செலவிடப்பட்டிருந்தது. இத் தொகையை அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மாதாந்த அங்கீகார எரிபொருள் அளவை 750 லீட்டர் வரை அதிகரித்துக் கொள்ளவதற்காக மாகாண விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முன்மொழிவொன்றை பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரித்துள்ளதாகவும் விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரமின்றி பெற்றுக் கொண்ட எரிபொருளிற்காக செலவிட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 80,168,825 ஆன 04 செலவின விடங்களிற்குரிய கணக்காய்விற்குரிய தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | சுட்டிக் காட்டியுள்ள விடயத்தை ஏற்றுக் கொள்வதாகவும் 2022 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இதனை சரிசெய்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள எழுத்துமூல சான்றுகளை சமர்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,622,912 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 6,709,574 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அரச துறை 24 வீதவரி அலகுகளில் மற்றும் தனியார் துறைக்குரிய 2407 வீதவரி | வீதவரி பதிவேடு தவறுகளுடன் காணப்பட்டதனால் நிலுவை | நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலகுகளிலிருநிது அறவிட வேண்டிய வீதவரி மீதி ரூபா 5,053,359 ஆனதுடன், இம் மீதயை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகள் சரியானவையல்ல எனவும், இவ்வாண்டு இறுதிக்கு முன்னர் வீதவரி பதிவேட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

(ஆ) வாடகை

--------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 129 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய குத்தவை மீதி ரூபா 11,801,918 ஆனதுடன் அவற்றிலிருந்து ரூபா 6,521,423 தொகை மீளாய்வாண்டிற்கும், ரூபா 5,280,495 ஆன மீதி ஓராண்டை விஞ்சிய மீதியுமானது. | அனைத்து குத்தகைதாரர்களுக்கும் நிலுவை தொகையை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும், தற்போது வருமான பரிசோதகர்களினூடா விரைவில் வருமானம் அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) ஏனைய

-------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட பொது மலசலகூட கட்டணம் ரூபா 33,184 மற்றும் தண்டப்பணம் ரூபா 6,347,220 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது வருமான பரிசோதகர்களினூடா விரைவில் வருமானம் அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**இனங்காணப்பட்ட நட்டம்**

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ருவன்வெள்ள நகர அபிவிருத்திக்கு தொடர்பான இரண்டு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிக்க 23 வியாபாரிகளிடமிருந்து ரூபா 6,610,000 ஆன முற்செலுத்தட் பணம் (Key Money) பெற்றிருந்ததுடன் கீழ் மாடியில் 6 கடையறைகளிற்காக ரூபா 3,014,484 ஆன 2 பகுதிக் கொடுப்பனவுகளை செய்திருக்கும் போது காணியின் உரிமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று தொடர்பாக காணி சுவீகரிக்கும் | இது தொடர்பாக திணைக்கள பரிசோதனை ஒன்றை செய்து தேவைான நடவடிக்கைகளை செய்து தருமாறு கேகாலை உதவி மாகாண ஆணையாளரின் மூலம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளதாகவும், அதன் பிரகாரம் எடுக்கப்படும் செயற்பாடுகளை கணக்காய்விற்கு அறிவித்து அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புவாய்ந்தவர்களை உறுதிப்படுத்தி ஏற்பட்ட நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சட்டத்தின் 38 பிரிவின் கீழ் சுவீகரிப்பது தொடர்பாக வர்தமானி மற்றும் தளக்கோல வரிபடத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமரிபிக்காததன் மீது காணியின் முறைபாட்டு தரப்பினருக்கு உரித்தாக இருக்கையில் நிரிமாணத்திற்கு செலவிட்ட ரூபா 4,819,144 ஆன தொகை பிரதேச சபைக்கு நட்டமொன்றாக இருந்ததுடன், வியாபாரிகளிடமிருந்து பெற்ற பணத்திற்காக வியாபார இடங்களை வழங்கவும் முடியாதிருந்தது. எனினும் இதற்கு பொறுப்புவாயந்தவர்களை உறுதிப்படுத்தி அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.